
பேக்கரி
மஹாராஜ்
புதுக்கோட்டை.
No.9,மார்த்தாண்டபுரம் முதல் தெரு,
புதுக்கோட்டை - 622 001.
Customer Service : 9655662206
To Download our App
GET IT ON Google Play
www.bakerymaharaj.com
fssai 12420016000073



புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM · VARALARUU · PUDUGAIVARALARU · VARALARUU · 7502051351




வணக்கம் புதுக்கோட்டை
India's most trusted jeweller
ஸ்ரீ குமரன்
தங்கமாளிகை
TS.No.2708, வடக்கு ராஜ வீதி,
புதுக்கோட்டை- 622 001.
Ph: 04322 220206



வெள்ளி ❖ ஜூன் 10, 2022 | சென்னை & புதுக்கோட்டை | பக்கம் 8 ❖ வரலாறு 7 ❖ இதழ் 246 ❖ ரூ.10



ஸ்ரீ புவனேஸ்வரி
தங்கமாளிகை இல்ல

திருமணவிழா



Er.N.விஜய்ஸ்ரீநாத் B.E.,
M.சுப்ரஜா (எ) மீனா BBA.,

மண நாள் : 10-06-2022 வெள்ளிக்கிழமை
மண இடம் : ADR திருமண மஹால்,
மாலையீடு, புதுக்கோட்டை.



...அன்புடன் அழைப்பது...
ஸ்ரீ புவனேஸ்வரி தங்கமாளிகை
குடும்பத்தார்





திருமண விழா
10 JUN 2022
இடம் : ADR திருமண மஹால்
மாலையீடு, புதுக்கோட்டை.
மணமக்கள் :
Er.N.விஜய்ஸ்ரீநாத் B.E.,
M.சுப்ரஜா (எ) மீனா BBA.,
வாழ்க வளமுடன்
மணமக்களை வாழ்த்திட வருகைதரும்
அனைவரும் வரவேற்று மகிழ்கிறோம்...
வாழ்த்துக்களுடன்...
நெல்லுமண்டித் தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி
ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டித்தெரு, புதுக்கோட்டை.
போன் : 04322 - 222 504, 222 505




புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ ஜூன். 10, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 8 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 245 ❖ ரூ.10

### இந்தியா உயிர்ப் பொருளாதாரம் 8 ஆண்டுகளில் 8 மடங்கு வளர்ச்சி

# பெருமிதம்

## பயோடெக் துறையில் இந்தியா வாய்ப்புகளின் பூமியாக கருதப்படுகிறது பிரதமர் மோடி பேச்சு

**டெல்லி, ஜூன்.10-**

**இந்தியாவின் உயிர் பொருளாதாரம் கடந்த 8 ஆண்டுகளில் 8 மடங்கு வளர்ச்சி கண்டுள்ளதாகவும், நாட்டில் புத்தாக்க நிறுவனங்களின் வளர்ச்சி எண்ணிக்கை 70 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகவும் பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.**



டெல்லியில் 2 நாட்கள் நடைபெற உள்ள உயிரி தொழில்நுட்ப தொழில் கண்காட்சியை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார். தொழில் முனைவோர், முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள் உள்ளிட்டோரை இணைக்கும் வகையில் இந்த கண்காட்சி நடைபெற உள்ளது. மேலும் இதில் 300-க்கும் அதிகமான அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. கண்காட்சியை தொடங்கி வைத்த பின்னர் நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர்,

இந்தியாவின் உயிரி பொருளாதாரம் கடந்த 8 ஆண்டுகளில் 8 மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. அதாவது கடந்த 2014ம் ஆண்டில் 1000 கோடி டாலராக இருந்த உயிரி பொருளாதாரம், கடந்த 8 ஆண்டுகளில் 8000 கோடி டாலராக வளர்ச்சி அடைந்துள்ளது. உயிரி தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பில் முதல் 10 நாடுகளின் பட்டியலில் இந்தியா இணைவது வெகு தொலைவில் இல்லை.

கடந்த 8 ஆண்டுகளில் இந்தியாவில் நூற்றுக்கணக்கில் இருந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கையும், இப்போது 70 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இந்தியாவில் தொழில் செய்வது எளிது என்ற கோட்பாட்டுடன் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. தொழில்முனைவோர் கலாச்சாரத்தை ஊக்கப்படுத்தி வருகிறது. தேசத்தின் வளர்ச்சிக்காக ஒவ்வொரு துறையையும் வலுப்படுத்தவே மத்திய அரசு எண்ணுகிறது. முந்தைய அணுகுமுறையான சில துறைகளைப் புறக்கணித்துவிட்டு, மற்றவற்றை மட்டும் கவனிக்கும் போக்கு மாறிவிட்டது. பயோடெக் துறையில் இந்தியா வாய்ப்புகளின் பூமியாக கருதப்படுகிறது என்று பிரதமர் குறிப்பிட்டார். பலதரப்பட்ட மக்கள் தொகை, மாறுபட்ட தட்பவெப்ப மண்டலங்கள், திறமையான மனித மூலதன குலம், எளிதாக வணிகம் செய்வதற்கான முயற்சிகள் மற்றும் பயோ பொருட்களின் தேவை ஆகியவை இதற்கு காரணமாக அமைகின்றன என பிரதமர் பட்டியலிட்டு. இவ்வாறு அவர் பேசனார்.

## 44-வது செஸ் ஒலிம்பியாட் தொடர் இலச்சினையை வெளியிட்டார் முதல்வர் ஸ்டாலின்




**சென்னை , ஜூன்.10-**

44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை மற்றும் சின்னத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

முதன்முறையாக தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெறவுள்ளது. சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் ஜூலை 28-ம் தேதி முதல் ஆகஸ்டு 10-ம் தேதி வரை இந்தப் போட்டித் தொடர் நடைபெறுகிறது.

இப்போட்டியில் 186 நாடுகளைச் சேர்ந்த 2000-க்கும் மேற்பட்ட சர்வதேச சதுரங்க விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

இப்போட்டியினை தமிழ்நாட்டில் நடத்துவது குறித்து முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் தமிழ்நாடு அரசு மற்றும் அகில இந்திய சதுரங்க கூட்டமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த மாதம் கையெழுத்தானது.

இதனைத் தொடர்ந்து, இந்த ஒலிம்பியாட் போட்டிகள் சிறப்பாக நடைபெற தலைமைச் செயலாளர் தலைமையில் சிறப்பு குழு அமைக்கப்பட்டு அனைத்து முன்னேற்பாடு பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்போட்டிக்கான ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்பு அலுவலராக தேசிய நலவாழ்வு குழும மேலாண்மை இயக்குநர் நியமிக்கப்பட்டு முன்னேற்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடருக்கான ஜோதி ஏற்றப்பட்டு நாடு முழுவதும் வலம் வரவுள்ளது. தமிழ்நாடு அரசின் சார்பில் இப்போட்டி குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவ, மாணவியர்களிடையே செஸ் போட்டிகள் நடத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பேருந்துகள், ரயில்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் இச்சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி குறித்து விளம்பரம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ரிப்பன் மாளிகை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வண்ண விளக்குகளால் ஒளிரூட்டப்பட்ட 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை மற்றும் "தம்பி" என்கிற சின்னத்தினையும் அறிமுகப்படுத்தினார்.

மேலும், #CHESS-CHENNAI2022 என்ற HashTag-ஐ முதலமைச்சர் வெளியிட, அகில இந்திய சதுரங்க கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் சஞ்சய் கபூர் பெற்றுக் கொண்டார்.

## கோயில் உண்டியல் மீதே அறநிலையத்துறைக்கு அக்கறை உள்ளது - அண்ணாமலை கடும் தாக்கு

நாமக்கல், ஜூன்.10-

நாமக்கல்லில் மத்திய பாஜக அரசின் 8 ஆண்டுகால சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் பூங்கா சாலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் என்.பி. சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். நகரத் தலைவர் கே.பி. சரவணன் வரவேற்றார். மாநில துணைத் தலைவர்கள் வி.பி. துரைசாமி, கே.பி. ராமலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை பேசுகையில், மத்திய அரசின் 8 ஆண்டுகால சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் 45 நாட்களை கடந்து நடந்து வருகிறது. இதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருகின்றனர் என்று கூறி, மத்திய அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார்.

அத்துடன், தமிழக அரசு மற்றும் அமைச்சர்களின் செயல்பாடுகள் குறித்து விமர்சித்தார். மேலும், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் அதன் அமைச்சர் சேகர்பாபு குறித்தும் அண்ணாமலை கடுமையாக தாக்கிப் பேசினார். அப்போது, கோயில் உண்டியல் மீதே அறநிலையத்துறைக்கு அக்கறை இருப்பதாகக் கூறினார்.

தொடர்ந்து பேசிய அண்ணாமலை, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் பாஜக நிர்வாகி ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். சம்மந்தப்பட்டவர்கள் மீது இம்மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால், ஜூலை முதல் வாரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களையும் காவல் துறையினர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவர். முதல் ஆளாக ஒரு காவல் நிலையத்தை நான் முற்றுகையிடுவேன், இந்த மாநில டிஜிபிக்கு தைரியம் இருந்தால் நடவடிக்கை எடுக்கட்டும் என்று சவால் விட்டுப் பேசினார்.

இதையடுத்து, மேடையை விட்டு கீழே இறங்கிய அண்ணாமலை, செய்தியாளர்களை சந்திக்காமல் சென்றார்.

## 10 என்ற அளவில் அவள் நயன் & நான் தான் ஒன்று கடவுளின் அருளால் திருமணம் நடந்துள்ளது விக்னேஷ் சிவன்

சென்னை , ஜூன்.10-

நடிகை நயன்தாராவை திருமணம் செய்தது குறித்து இயக்குநர் விக்னேஷ் சிவன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நெகிழ்ச்சியான பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார்.



நடிகை நயன்தாரா இயக்குனர் விக்னேஷ் சிவன் திருமணம் மகாபலிபுரத்தில் உள்ள தனியார் ஓட்டல் ரிசார்ட்டில் நேற்று காலை நடைபெற்றது. இதில் பங்கேற்க நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

திருமண நிகழ்ச்சியில் ரஜினிகாந்த், ஷாருக்கான், சூர்யா, கார்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். நயன்தாராவை 6 வருடங்களுக்கு மேல் காதலித்து வந்த விக்னேஷ் சிவன் திருமணத்திற்கு முன்பு இன்ஸ்டாவில் நயன்தாராவின் புகைப்படங்களை பகிர்ந்து தன் மனதில் தோன்றுவதை பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் இந்து மத முறைப்படி 25 புரோகிதர்கள் மந்திரம் முழங்க விக்னேஷ் சிவன் நயன்தாராவுக்கு தாலி கட்டினார். புகைப்படங்களை வெளியிட கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில், தனது திருமண புகைப்படத்துடன் நெகிழ்ச்சியான பதிவு ஒன்றை விக்னேஷ் சிவன் சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், 10 என்ற அளவில்... அவள் நயன் & நான்தான் ஒன்று என்றும் கடவுளின் அருளால் திருமணம் செய்துகொண்டதாகவும் அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

## மணல் அளவீட்டு முறையை மாற்றக் கோரிய வழக்கு தீர்ப்பை ஒத்திவைத்தது உயர் நீதிமன்றம்

மதுரை , ஜூன்.10-

மணல் அளவீட்டு முறையை மாற்றக்கோரிய வழக்கில் தீர்ப்பை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

திருச்சியைச் சேர்ந்த ராஜேந்திரன், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: "தமிழகத்தில் மணல் யூனிட் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு யூனிட்டிற்கு ரூ.1000 விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த அளவீடு தர நிர்ணயம் செய்யப்பட்ட அளவீடு இல்லை. சட்ட அளவியல் விதிப்படி மணல், கிராவல் மண், கிரானைட் போன்றவை முறையான தர நிர்ணயம் செய்யப்பட்ட எடை அல்லது அளவீட்டு முறையில் விற்பனை செய்யப்பட வேண்டும்.

தற்போதைய அளவீட்டு முறையால் அரசுக்கு அதிக வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. பல்வேறு முறைகேடுகளும் நடைபெறுகின்றன. எனவே மணல் விற்பனை அளவீட்டு முறையை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளித்தும் பலனில்லை. எனவே, மணல் விற்பனைக்கு தர நிர்ணய அளவீட்டு முறையை உருவாக்கி, அந்த அளவீட்டு முறை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் பி.என். பிரகாஷ், எஸ்.ஆனந்தி அமர்வு விசாரித்தது. அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், ''ஒரு யூனிட்டுக்கு என விலை நிர்ணயம் செய்யப்பட்டு மணல் விற்பனை நடைபெறுகிறது. ஒரு யூனிட் என்பது 2.83 கன மீட்டர் என அளவீடு செயயப்பட்டு மணல் விற்பனை நடைபெறுகிறது" என்றார். இதையடுத்து, வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா தீத்தானிப்பட்டி அருகே நெடுஞ்சாலையில் அதிவேகமாக சென்ற கார் மோதியதில் 6 ஆடுகள் சம்பவ இடத்திலேயே பலியாகின ஆட்டின் உரிமையாளரான சித்திரைவேலு என்பவர் படுகாயத்துடன் சிகிச்சைக்காக மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.




## சசிகலாவிற்கு அதிமுகவில் இடமில்லை முன்னாள் அதிமுக அமைச்சர் நத்தம் விஸ்வநாதன்

**புதுக்கோட்டை , ஜூன்.10-**

சசிகலாவை ஒருபோதும் அதிமுகவில் சேர்க்க மாட்டோம், அதிமுகவில் ஒற்றை தலைமைக்கு இடமே இல்லை, பாஜகவினர் அழைத்தால் சசிகலா அங்கு செல்லலாம் புதுக்கோட்டையில் முன்னாள் அதிமுக அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் பேட்டி



புதுக்கோட்டையில் நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்க வந்திருந்த அதிமுகவின் முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்:

சசிகலாவை ஒரு போதும் அதிமுகவில் சேர்த்துக் கொள்ள மாட்டோம், சசிகலா விற்கும் அதிமுகவிற்கும் எந்த சம்பந்தமே இல்லை, அவரைப் பற்றி பேசவேண்டிய அவசியமும் இல்லை, கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஒரு நபர் குறித்து ஏன் பேச வேண்டும், அதிமுகவில் ஒற்றை தலைமை என்ற பேச்சுக்கே இடமே இல்லை, தற்போது ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என இருவர் சரியான முறையில் கட்சியை வழி நடத்தி வருகின்றனர், பாஜகவினர் அழைத்தால் அங்கு வேண்டுமானால் சசிகலா செல்லட்டும் இங்கு அவருக்கு இடமில்லை, அதிமுகவைப் பொறுத்தவரையில் எதுவாகினும் பொதுக்குழு எடுக்கும் தீர்மானம் மட்டுமே அதிகாரப்பூர்வமானது.

திமுகவும் மின்தடை பிரச்சனையும் பின்னிப் பிணைந்தவை என்றும் அது பிரிக்க முடியாதது என்றும் திமுக ஆட்சிக்கு வந்தாலே மின்தடை பிரச்சனை வந்துவிடும் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றே என்றும் மின்தடை பிரச்சனைக்கு தற்போதைய அமைச்சரின் நிர்வாக திறமை இன்மையே காரணம் என்றும் அவருக்கு இத்துறையை பற்றி அனுபவம் போதாது இது குறித்து நான் ஏற்கனவே சட்டசபையிலும் பேசியிருக்கிறேன் என்றும் மின்சார துறையை தமிழக முதல்வரே கையில் எடுத்து கவனித்தால் மட்டுமே மின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் தமிழகத்தில் திமுகவுக்கு மாற்று அதிமுகதான், அதிமுக மட்டுமே தமிழகத்தில் எதிர்க்கட்சியாக இருக்க முடியும்

பாஜக உள்ளிட்ட கட்சிகள் அவர் அரசியல் காரணங்களுக்காக சில விஷயங்களைகூறுவார்கள் அதைகவனத்தில்எடுத்துக் கொள்ள முடியாது காலம் வரும்போது மக்கள் உரியவர்களை தேர்ந்தெடுப்பார்கள் என்றும் நத்தம் விஸ்வநாதன் கூறினார்.

# இன்று





## சிந்திப்போம்.... செயல்படுவோம்




தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,775 | Rs.5,174 |

## வரலாற்றில் இன்று



1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

### மணமேல்குடியில் எண்ணும் எழுத்தும் பயிற்சியினை

# மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் பார்வையிட்டு ஆய்வு



புதுக்கோட்டை, ஜூன்.10-

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஒன்றியம், மணமேல்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொடக்க நிலை ஆசிரியர்களுக்கான எண்ணும் எழுத்தும் 5 நாள் பயிற்சி நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சியினை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் பெ. நடராஜன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் பயிற்சிக்கு வந்திருந்த ஆசிரியர்களிடம் கூறியதாவது, கொரோனா பெருந்தொற்றின் தாக்கத்தால் அனைத்து நிலை மாணவர்களிடம் கற்றலில் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக 1 முதல் 3 ம் வகுப்பு மாணவர்களுக்கு போதிய கற்றல் திறன்களான வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை கணிதம் ஆகியவற்றில் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனை 2025 ம் ஆண்டிற்குள் நிவர்த்தி செய்யும் பொருட்டு தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ள எண்ணும் எழுத்தும் திட்டமானது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பின்னர் பயிற்சியில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்து ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்.

தமிழக அரசால் தொடங்கப்பட்ட எண்ணும் எழுத்தும் திட்டத்தை மிகச் சிறந்த முறையில் வகுப்பறையில் ஆசிரியர்கள் 1 முதல் 3 ம் வகுப்பு மாணவர்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

பார்வையின் போது பயிற்சியின் மைய ஒருங்கிணைப்பாளர் விரிவுரையாளர் ஆர். கோபாலகிருஷ்ணன், வட்டார கல்வி அலுவலர் அன்பழகன் மற்றும் வட்டார வள மைய ஒருங்கிணைப்பாளர் சிவயோகம் ஆகியோர் உடனிருந்தனர். இப்பயிற்சியில் மணமேல்குடி ஒன்றியத்திலிருந்து 80 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். மற்றும் கருத்தாளர்களாக ஆசிரியர் பயிற்றுநர்கள் முத்துராமன், வேல்சாமி மற்றும் ஆசிரியர்கள் கண்ணன், முத்துராஜா, கர்ணன் ஆகியோர் செயல்பட்டனர்.

# தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் நடைபெற்ற பழமை வாய்ந்த துவக்கப்பள்ளி நூற்றாண்டு கட்டிட திறப்பு விழா



தென்காசி, ஜூன்.10-

தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் பழமை வாய்ந்த தாருஸ்ஸலாம் துவக்கப்பள்ளி நூற்றாண்டு கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. 1921 ஆம் ஆண்டு ஆரம்பப் பள்ளியாக தொடங்கப்பட்ட இப்பள்ளி தற்போது நூற்றாண்டை நிறைவு செய்து மேல்நிலை பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இப்பள்ளி கட்டிடங்களை தென்காசி மாவட்டத்தில் தலை சிறந்த மருத்துவராக விளங்கும் அமெரிக்கா டாக்டர் என்று பெருமையுடன் அழைக்கப்படும் கொடைவள்ளல் எஸ்.எம். உதுமான் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது.

இதில் பெரும் பங்கு வகிக்கும் குண்டோட்டிஜமாத் தலைவர்எஸ்.எம். பசுலுத்தீன், துராப் தைக்கா மக்பரா முத்தவல்லி எஸ்.எம். முஹம்மது அனீஸ்,எஸ்எம், குடும்பத்தை சார்ந்தவர்கள், 6 முஹல்லாக்களை சார்ந்த குண்டோட்டி ஜமாத் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஆசிரிய ,ஆசிரியர்கள், பள்ளியில் பயின்ற மாணவ ,மாணவியர்கள், பெற்றோர்கள், இஸ்லாத்தை சேர்ந்த பொதுமக்கள், எஸ். ஹையதீன்சாகீபு,எஸ். மசூது சாகிபு,திறப்பு விழாவிற்கு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாம் பெண்கள், ஆண்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரியாணி, சைவ உணவு வகைகள் என சிறப்பான விருந்து கொடுத்து அனைவரையும் விழாவில் சிறப்பித்து மகிழ்வித்தனர்.

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437

# ஜனாதிபதி தேர்தல் ஜூலை 18ம் தேதி இந்திய தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார்



புதுடெல்லி, ஜூன்.10-

ஜனாதிபதி தேர்தல் ஜூலை 18ம் தேதி நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் அறிவித்து உள்ளார். புதுடெல்லி இந்திய தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் புதுடெல்லியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அதன் முக்கிய அமசங்கள் பின்வருமாறு, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் ஜூலை 24ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

ராஜ்யசபாவின் செயலாளர் தேர்தல் அதிகாரியாக செயல்படுவார் - இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் ஜனாதிபதி தேர்தலில் பதிவாக உள்ள மொத்த வாக்குகள் 10,86,431. 4,809 பேர் வாக்காளர்களாக உள்ளனர். (776 எம்.பி.க்கள் மற்றும் 4,033 எம்.எல்.ஏ.க்கள்) 776 எம்.பி.க்களின் ஓட்டு மதிப்பு 5,43,700; 4,033 எம்.எல்.ஏ.க்களின் ஓட்டு மதிப்பு 5,43,23. ஜனாதிபதி தேர்தல் ஜூலை 18ம் தேதி நடைபெறும் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் ஜூன் 25-ல் தொடங்கும், வேட்புமனு தாக்கல் செய்ய கடைசிநாள் ஜூன் 29 ஆகும், வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை ஜூன் 30-ல் நடைபெறும்.

மனுக்களை திரும்ப பெறுவதற்கான கடைசி தேதி ஜூலை 2, ஜூலை 21-ல் வாக்குகள் எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர், இந்திய குடிமகனாகவும், 35 வயது நிரம்பியவராகவும் இருக்க வேண்டும் என்பது விதி. மக்கள்தொகை அடிப்படையில் ஒவ்வொரு மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கான மதிப்பு வேறுபடும். ஒரு எம்.பி வாக்கு மதிப்பு 700 ஆக நிர்ணயம். ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கும் ஒரு தமிழக எம்.எல்.ஏ.வின் வாக்கு மதிப்பு 176 ஆகும். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், நாட்டின் அனைத்து சட்டமன்றங்களிலும் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறும்



▸ சென்னை உயர் நீதிமன்றத்தில் பெண் நீதிபதிக்கு உதவியாளராக நியமிக்கப் பட்டுள்ள முதல் பெண் சோப்தார்

### செந்துரான் பாலிடெக்னிக் கல்லூரி மாணவன்

# மாநில குத்துச்சண்டை போட்டியில் இரண்டாம் இடம்பிடித்து சாதனை



புதுக்கோட்டை ஜூன்.10-

செந்துரான் பாலிடெக்னிக் கல்லூரியில் அமைப்பியல் துறையில் இரண்டாமாண்டு பயிலும் ராகேஷ் என்கின்ற மாணவனுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. மேற்படி மாணவன் சென்னையில் நடைபெற்ற "மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பாக பங்கேற்றார் (சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது). இப்போட்டியில் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்து பல வீரர்கள் கலந்து கொண்டனர். ராகேஷ், 90 கிலோக்கு கூடுதலான எடை பிரிவில் வெள்ளி பதக்கம் வென்று கல்லூரிக்கும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். மேலும் இம்மாணவன் தேசிய அளவில் நடைபெறும் குத்துச்சண்டை போட்டிக்கு தேர்வாகியுள்ளார்.

இம்மாணவரது சாதனையை கௌரவிக்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் கல்லூரியின் முதல்வர் செல்வராஜ் தலைமை வகித்து பேசினார். கல்லூரியின் தலைவர் செல்வராஜ், நிர்வாக இயக்குநர் சு.வைரவன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் முதன்மைச்செயல் அலுவலர் கார்த்திக் தமது வாழ்த்துறையில் போட்டிகளில் தன்னம்பிக்கையோடு கலந்து கொண்டு சாதனைகள் நிகழ்த்த வேண்டுமென கேட்டு கொண்டார். இறுதியாக போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவனுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் உபதலைவர் நடராஜன், செயலர் தியாகராஜன், தாளாளர் ராமையா, பொருளாளர் மு.முத்துராமன் ,செயல் இயக்குநர் ஆ.பாண்டிகிருஸ்ணன் ,மனிதவள இயக்குநர் ஏ.மீனாவைரவன் மற்றும் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இறுதியாக உடற்கல்வி இயக்குநர் பாலமுருகன் நன்றியுரை வழங்கினார்.

# கறம்பக்குடியில் கூடுதல் மருத்துவர்களை நியமிக்க கோரி சாலைமறியல் போராட்டம்



கறம்பக்குடி, ஜூன். 10-

கறம்பக்குடி அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்களை நியமிக்க கோரி சாலை மறியலில் ஈடுபட்ட முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அரசு தாலுகா தலைமை மருத்துவமனை உள்ளது. இங்கு தினமும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆனால் இங்கு இரண்டு மருத்துவர்கள் மட்டுமே பணியில் உள்ளனர், இரவு நேரங்களில் மருத்துவர்கள் பணியில் இருப்பதில்லை. செவிலியர்கள் பற்றாக்குறையும் உள்ளது, போதிய இடவசதி இன்மையால் மருத்துவ உபகரணங்களை பயன்படுத்த முடியாத சூழல் உள்ளது.

இதனால் அவசர சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் மருத்துவ வசதி பெற முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர் இது குறித்து அதிகாரிகளுக்கு பலமுறை புகார் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில் கறம்பக்குடி நகர முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின் சார்பில் கறம்பக்குடி அரசு மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்களை நியமிக்க கோரியும், போதிய வசதிகள் செய்து தர வலியுறுத்தியும், சீனி கடை முக்கம் பகுதியில் செயல்படும் டாஸ்மாக் மதுபான கடைகளை இடமாற்றம் செய்யக் கோரியும் கறம்பக்குடி சீனி கடை முகத்தில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது, இதுகுறித்து தகவல் அறிந்து வந்த ஆலங்குடி துணை போலீஸ் சூப்பிரண்டு வடிவேலு மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சாலைமறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இருப்பினும் போராட்டம் நடத்திய முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினர் கலைந்து செல்லவில்லை, சாலை மறியலில் ஈடுபட்ட முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் நகர செயலாளர் நூருல் அமீன் உள்பட 20பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

# கோவையில் சாலையோரம் கொட்டப்பட்டிருந்த மணலால் நேர்ந்த விபரீதம் – பஸ் சக்கரத்தில் சிக்கி இருவர் பலி



கோவை, ஜூன்.10-

கோவையில் வடமாநிலத்தை சேர்ந்த நபர் கட்டுமான பணிக்காக சாலையோரத்தில் மணலை கொட்டி வைத்ததால் இந்த விபத்து ஏற்பட்டு உள்ளது. கோயம்புத்தூர் கோவை சவுரிபாளையத்தை சேர்ந்தவர் மனோஜ்(வயது25). இவர் சரவணம்பட்டியில் உள்ள தனியார் மால் வளாகத்தில் கம்ப்யூட்டர் பிரிவு ஊழியராக பணியாற்றி வந்தார். இவருடைய பெண் தோழி ஆர்த்தி(19). போளுவாம்பட்டி இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்தவர். கோவையில் உள்ள ஒரு ஜவுளிக்கடையில் முன்பு ஊழியராக வேலை செய்து வந்தார். பின்னர் வேலையில் இருந்து நின்ற ஆர்த்தி, புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதில் ஆர்வமுடன் விளங்கி உள்ளார். சினிமா துறையில் சேருவதிலும் விருப்பத்துடன் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று காலை 9.30 மணியளவில், மோட்டார் சைக்கிளில் மனோஜும், ஆர்த்தியும் கோவையில் இருந்து போளுவாம்பட்டி நோக்கி சென்றனர். செல்வபுரம் போலீஸ் நிலையம் அருகே தில்லைநகர் பகுதியில் மோட்டார் சைக்கிள் வந்த போது கட்டுமான பணிக்காக சாலையோரம் கொட்டி வைக்கப்பட்டிருந்த எம் சாண்ட் மணலில் ஏறி மோட்டார் சைக்கிள் சறுக்கி விழுந்தது. இதில் மோட்டார் சைக்கிளில் இருந்த கீழே விழுந்த மனோஜ் மற்றும் ஆர்த்தி பின்னால் வந்த பஸ்சின் பின் சக்கரத்துக்குள் சிக்கினர். இந்த விபத்தில் தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் இருவரும் உயிரிழந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த மேற்குப்பகுதி போக்குவரத்து போலீசார் விரைந்து சென்று 2 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதுகுறித்து போலீசார் கூறுகையில, வடமாநிலத்தை சேர்ந்த அனில் என்பவர், கட்டுமான பணிக்காக சாலையோரத்தில் மணலை கொட்டி வைத்துள்ளார். அந்த மணலில் இருசக்கர வாகனம் சறுக்கியதால்தான் இந்த விபத்து நடந்து 2 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே இந்த விபத்து தொடர்பாக அனில் முதல் குற்றவாளியாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார். பஸ் டிரைவர் பிரபுகுமார் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# கிருஷ்ண பரமாத்மா வாரிசாக அவதாரமெடுத்து மக்களை காப்பாற்றுவேன்" – சீமான் ஆவேசம்



காரைக்குடி, ஜூன்.10-

மக்கள் என்னை நிச்சயம் தேடி வருவார்கள். அதுவரை நான் பொறுமையாக இருந்து கிருஷ்ண பரமாத்மா வாரிசாக அவதாரமெடுத்து மக்களை காப்பாற்றுவேன்" என காரைக்குடியில் சீமான் பேசியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் செய்தியாளர்களை நேற்று சந்தித்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியதாவது, மேலும், "திமுக ஊழல் பற்றி பேசும் அண்ணாமலை, கடந்த 10 ஆண்டுகள் கூட்டணியாக இருக்கும் அதிமுகவின் ஊழல் பற்றியும் பேச வேண்டும். ஊழலுக்காக சிறை சென்ற தலைவியின் கட்சியில் கூட்டணி வைத்த பாஜகவின் தமிழக தலைவர் அண்ணாமலைக்கு திமுகவின் ஊழல் குறித்து பேச தகுதி இல்லை.

பாஜகவினர் சாமியைப் பற்றியே பேசுகின்றனர். ஆனால் நாங்கள், வாழும் பூமியைப் பற்றி பேசுகின்றோம். மக்கள் என்னை நிச்சயம் தேடி வருவார்கள். அதுவரை நான் பொறுமையாக இருந்து கிருஷ்ண பரமாத்மா வாரிசாக அவதாரமெடுத்து மக்களை காப்பாற்றுவேன். தமிழ் தேசிய அரசியல் கோட்பாடு உடைய நாம் தமிழர் கட்சி மட்டுமே தமிழகத்தில் உண்மையான எதிர்க்கட்சி. 2024 தேர்தலில் எத்தனை கட்சிகள் நின்றாலும், நாம் தமிழர் கட்சி தனியாக நிற்கும். அண்ணாமலையினால் அது முடியாது" என்றார்.

# பள்ளிகள் திறப்பு: மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமை செயலாளர் இறையன்பு உத்தரவு



சென்னை, ஜூன்.10–

தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து 1-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு பள்ளிகள் வருகிற 13-ந்தேதி (திங்கட்கிழமை) முதல் திறக்கப்பட உள்ளன. பள்ளிகள் திறப்பை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகளில் மாவட்ட நிர்வாகங்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வரும் 13ம் தேதி பள்ளிகள் திறக்கப்படுவதையொட்டி, மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமை செயலாளர் இறையன்பு முக்கிய உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார்.

இது குறித்து தலைமை செயலாளர் இறையன்பு அனுப்பியுள்ள கடிதத்தில்,

2 ஆண்டுகளுக்கு பிறகு பள்ளிகள் திறப்பதால் தீவிரமாக தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். பள்ளிகளில் தூய்மை இயக்கத்தை அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கடைப்பிடிக்க வேண்டும். பள்ளிகளை தூய்மைப்படுத்த பெற்றோர் ஆசிரியர் கழகத்தினரிடம் தலைமை ஆசிரியர்கள் நிதி வசூலிக்க கூடாது. பள்ளிகளை புதுப்பொலிவுடன் சீரமைத்து வகுப்புகளை நடத்த வேண்டும் என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன்: 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



▶ சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், வார்டு–146, மகாத்மா காந்தி தெரு மற்றும் ராஜீவ் காந்தி தெருக்களில் ரூ.2.37 கோடி மதிப்பில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர். பிரியா, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் கா.கணபதி, துணை ஆணையாளர் (சுகாதாரம்) எஸ்.மனிஷ், மண்டல குழு தலைவர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் கு.சண்முகம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அரசு நிகழ்ச்சியில் பங்கேற்க வருகை தந்திருந்த தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து புதுக்கோட்டை சமஸ்தானத்தின் மாமன்னர் நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்து செய்தி பெற ராணியார் சாருபாலா தொண்டைமான், விழா குழு துணை தலைவர் வழக்கறிஞர் சந்திரசேகரன், செயலாளர் சம்பத்குமார், முன்னாள் தக்கார் வைரவன், ரவிச்சந்திரன் ஆகியோர் சந்தித்து மன்னருக்கு அரசு சார்பில் மணிமண்டபம் கட்டவும் கோரிக்கை வைத்தனர். அருகில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி உள்ளார்.

# திருமருகல் அருகே மகளிர் சுகாதார வளாகம் சீரமைக்கப்படுமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு



நாகப்பட்டினம், ஜூன்.10–

திருமருகல் அருகே மகளிர் சுகாதார வளாகம் சீரமைக்கப்படுமா? என பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருச்செங்காட்டங்குடி ஊராட்சி வடக்கு ஆதிதிராவிடர் தெருவில் 100-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இங்கு வசிக்கும் மக்கள் மற்றும் உள்ளூர், வெளியூர் பொதுமக்கள் நலன் கருதி மகளிர் மற்றும் குழந்தைகள் சுகாதார வளாகம் கட்டப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது.

இந்த நிலையில் சுமார் 2 ஆண்டுகளாக சுகாதார வளாகம் எந்தவித பராமரிப்பும் இல்லாமல் உள்ளது. மேலும் சுகாதார வளாகத்தின் பின்புறம் போர்வெல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த போர்வெலில் உள்ள மோட்டாரை மர்ம நபர்கள் அடிக்கடி திருடி செல்வதால் தண்ணீர் இல்லாமல் மகளிர் கையில் தண்ணீர் எடுத்து செல்ல வேண்டிய நிலை உள்ளது.

மேலும் சுகாதார வளாகத்தை சுற்றி கருவேல மரங்கள் முள்புதர்கள் காடு போல மண்டி கிடக்கிறது. இதனால் சுகாதார வளாகத்தின் உள்ளே செல்ல முடியாத நிலை உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் திறந்தவெளியில் மலம் கழிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளது.

இது குறித்து சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பலமுறை மனு கொடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அப்போது பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து மகளிர் மற்றும் குழந்தைகள் சுகாதார வளாகத்தை புதுப்பித்து தரவேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர்.



▶ திருவள்ளூர் அருகே மேல்நல்லாத்தூர் திமுக ஒன்றிய பிரதிநிதி எம் ராஜசேகரன் தன்னுடைய பிறந்த நாளில் ஏழை எளிய மக்களுக்கு காலை உணவு அளித்தார் அதைத்தொடர்ந்து பள்ளி மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் மரக்கன்றுகளை நட்டா அவருடைய கட்சிக்கு பிரதிநிதிகள் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினர்

# திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்



திருவள்ளூர் ஜூன்.10–

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகள் சார்பாக 3,494 பயனாளிகளுக்கு ரூபாய் 122.03 கோடி மதிப்பீட்டில் விவசாயம் தொழில் கடன்கள் தனிநபர் கடன் உள்ளிட்ட பல்வேறு வகையான கடன்களையும், ஜன் சுரக்ஷா என்ற மக்கள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 3009 நபர்களுக்கு பொது காப்பீடு, 3902 நபர்களுக்கு விபத்து காப்பீடு, 733 நபர்களுக்கு ஒய்வூதிய அட்டை மற்றும் உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் 145 விவசாயிகளுக்கு கேசிசி அட்டைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் வழங்கினார்.

உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) எஸ். கோவிந்தராஜன், இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் மோகன்தாஸ், தலைமை அலுவலக உதவி பொது மேலாளர் மோகன் குமார், பாரத ஸ்டேட் வங்கி உதவி பொது மேலாளர் ராஜலட்சுமி, யூனியன் வங்கியின் உதவி பிராந்திய மேலாளர் ரவிசங்கர், பேங்க் ஆப் இந்தியா உதவி பொது மேலாளர் பழனி ,காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி உதவி பொது மேலாளர் நாராயணன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சீனிவாசன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் வி. மணிவண்ணன், பல்வேறு வங்கிகளில் மேலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்

# திருமருகல் அருகே வீட்டின் கதவை உடைத்து 4 பவுன் நகை ரூ.1 லட்சம் பணம் திருட்டு

நாகபட்டினம், ஜூன்.10–

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருச்செங்காட்டங்குடி வடக்குத்தெருவை சேர்ந்தவர் பொன்னுசாமி மகன் ராஜாங்கம் (வயது 56).இவர் தனது மனைவி சந்திரா,மகன் ரமேஷ், மருமகள் விஜயலட்சுமி ஆகியோர் வீட்டை பூட்டி விட்டு காரைக்கால் சென்றுள்ளனர்.

நேற்று முதல் நாள் மதியம் வீட்டிற்கு திரும்பி வந்த போது வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டு இருந்தது.இதனால் அதிர்ச்சி அடைந்த ராஜாங்கம் வீட்டின் உள்ளே சென்று பார்த்தார். அப்போது வீட்டில் இருந்த பீரோவை உடைத்து அதில் வைத்திருந்த 4 பவுன் நகை மற்றும் ரூ.1 லட்சம் பணம் திருட்டு போயிருந்தது தெரியவந்தது.

இது குறித்து திருக்கண்ணபுரம் போலீசில் புகார் அளித்தனர்.இதன்பேரில் திருக்கண்ணபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து நகையை திருடிச் சென்ற மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

# சென்னை மாவட்டத்தில் இரண்டு வருடத்திற்கு பிறகு பொதுமக்கள் நேரடியாக பங்கேற்கும் ஜமாபந்தி



சென்னை ஜூன்.10–

சென்னை மாவட்டத்தில் இரண்டு வருடத்திற்கு பிறகு பொதுமக்கள் நேரடியாக பங்கேற்கும் ஜமாபந்தி எனப்படும் 14 31 பசலி காண வருவாய் தீர்ப்பாய தணிக்கை சென்னை மாவட்டம் மாதவரம் வட்டத்துக்கு உட்பட்ட புத்தகரம் மாத்தூர் கொசப்பூர் மஞ்சம்பாக்கம் கதிர்வேடு சூரப்பட்டு புழல் விளக்குப் பட்டு வடபெரும்பாக்கம் செட்டிமேடு ஆகிய ஊராட்சிகளில் உள்ள பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு இந்த ஜமாபந்தியில் பட்டா மாறுதல் உட்பிரிவு செய்தல் நில எல்லை அளத்தல் முதியோர் உதவித்தொகை இலவச பட்டா குடும்ப அட்டை உள்ளிட்ட கோரிக்கை தொடர்பான மனுக்களை வருவாய் கோட்டாட்சியர் வடசென்னை கோட்டம் வருவாய் தீர்ப்பாய அலுவலர் கே.கண்ணப்பன் அவர்களிடம் இது தொடர்பான மனுக்களை நடவடிக்கை எடுக்கும்படி மனு அளித்தனர்.

மாதவரம் வட்டாட்சியர் சத்தியேந்திர ராஜ் தலைமையில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் பொதுமக்கள் அளித்த மனுக்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். துணை வட்டாட்சியர் உமாமகேஸ்வரி, தலைமை நில அளவர் அண்ணா குபேந்திரன், சர்வர் பார்த்திபன் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர். 24வது வார்டு கவுன்சிலர் புழல் சேட்டு மனுக்களை உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வைத்தார்.

# மயிலாடுதுறை அருகே செருதியூர் கிராமத்தில் உமாமகேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்





மயிலாடுதுறை ஜூன்.10–

மயிலாடுதுறை மாவட்டம் செருதியூர் கிராமத்தில் சோழர் காலத்தைச் சேர்ந்த பழமையான அகிலாண்டேஸ்வரி சமேத உமாமகேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. பழமை வாய்ந்த இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. கிராம மக்களால் புதுப்பிக்கப்பட்ட இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகத்திற்கான யாகசாலை பூஜைகள் கடந்த 7ஆம் தேதி துவங்கியது.

யாகசாலையில் புனிதநீர் நிரப்பப்பட்ட கடங்கள் வைக்கப்பட்டு நான்கு கால யாகசாலை பூஜைகள் நடைபெற்று வந்தன. நேற்று நான்காம் கால யாகசாலை பூஜை நிறைவடைந்து பூர்ணாஹுதி மற்றும் தீபாரதனை நடைபெற்றது. தொடர்ந்து மங்கள வாத்தியங்கள் முழங்க புனித நீர் அடங்கிய கடங்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசங்களுக்கு ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து சுவாமி அம்பாள் முருகர் மகாலட்சுமி நவக்கிரகங்கள் சன்னதிகள் ஆகியவற்றில் மூலவருக்கு மகா அபிஷேகமும் மகா தீபாராதனையும் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவடைந்தது. திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.



▶ திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஆரணி நெசல் இன்டர்நேஷனல் மகளிர் கல்லூரியில் ஆரணி அரசு மருத்துவமனை மருத்துவர்கள் இளையராஜா மற்றும் பிரியதர்ஷினி ஆகியோர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை வைத்தனர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி தாளாளர் வழக்கறிஞர் ஜாகிர் உசேன், முதல்வர் மகபூப் பி மற்றும் கல்லூரி மாணவிகள் உடன் உள்ளனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் 5 இடங்களில்–என்ஐஏ தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை



மயிலாடுதுறை ஜூன்.10–

மயிலாடுதுறை மாவட்டத்தில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் நேற்று காலை முதல் மாவட்டத்தில் நீடூர் எலந்தங்குடி, அரிவளூர், கிளியனூர், உத்திரங்குடி ஆகிய 5 இடங்களில் சென்னையில் இருந்து வந்துள்ள என்ஐஏ எஸ்பி ஸ்ரீஜீத் தலைமையில் ஐந்து ஆய்வாளர் கொண்ட அதிகாரிகள் ஐந்து குழுக்களாக பிரிந்து சோதனை மேற்கொண்டனர். மயிலாடுதுறையில் சட்டத்துக்கு புறம்பாக மர்ம கும்பல் ஒன்று செயல்பட்டு வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

அதில் ஒருவர் காரில் தப்பிச் செல்வதை அறிந்த போலீசார், அந்த காரை கடந்த பிப்ரவரி 21 ம் தேதி மயிலாடுதுறை ரயில் நிலையம் அருகே காவல்துறையினர் மடக்கிப் பிடித்தனர். அப்போது அந்த காரில் நீடூரை சேர்ந்த சாதிக் பாஷா, ஜஹபர்அலி, கோவை முகமது ஆசிக், காரைக்கால் முகமது இர்ஃபான், சென்னை அயனாவரம் ரஹ்மத் இருப்பது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து அவர்களை காவல்துறையினர் விசாரித்தபோது போலீசாரை சாதிக் பாஷா துப்பாகியை காட்டி மிரட்டியுள்ளர். இதனை அடுத்து அவர்கள் ஐந்து பேரையும் கைது செய்து திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு சமீபத்தில் தேசிய புலனாய்வு பிரிவுக்கு மாற்றப்பட்டது. விசாரணையில் இவர்கள் ஐஎஸ் பயங்கரவாத அமைப்புக்கு நிதி மற்றும் ஆட்களை திரட்டும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளதாக தெரிகிறது.

இதுகுறித்து தேசிய புலனாய்வு அமைப்பான என்ஐஏ அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக தற்போது இந்த சோதனை நடைபெற்றதாக தெரிகிறது. மேலும் டெல்லியில் பதியப்பட்ட வழக்கு ஒன்றில் ஆதாரங்களைத் திரட்டுவதற்காக இந்த சோதனை நடைபெற்று வருவதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சோதனை காரணமாகமயிலாடுதுறை மாவட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து ஏழு மணி நேரமாக நடைபெற்று வந்த சோதனை மதியம் முடிவடைந்தது. இந்த சோதனையில் பல்வேறு ஆவனங்கள் திரட்டப்பட்டு உள்ளதாக காவல்துறைவட்டாரங்கள் சார்பில் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது . இதனை அடுத்து சோதனை குறித்த விபரங்களை வெளியிடுவதற்கு அதிகாரிகள் மறுத்துவிட்டனர். தொடர்ந்து மயிலாடுதுறை காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ளூர் காவல் துறையினருடன் என்ஐஏ அதிகாரிகள் ஆலோசனை மேற்கொண்டனர்.

மாண்புமிகு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையர்
திருவள்ளூர்
Cc : 1/2022
YOGAPRIYAN,
S/O MUTHUKRISHNAN
NO,4,RAMASAMY STREET,
VENKATESWARA NAGAR,
AMBATTUR CHENNAI - 600053.
--- மனுதாரர்
எதிர்
SAI RAM MOTORS
REPRESENTED BY ITS PROPRIETOR
1. PACHAIYAPPAN (OWNER)
2.AJAY SELVAN,( DEPUTY MANAGER)
OFFICE AT SAKTHI TOWERS
NO.882, MTH RD PADI CH-50.
--- எதிர் மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையத்தில் மனுதாரர் தங்களுக்கு எதிராக நஷ்டஈடு வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு விசாரணைக்காக வருகின்ற 17.06.2022 -ந் தேதி காலை 10.00 மணிக்கு வர இருப்பதால். மேற்படி வழக்கின் எதிரிகளில் 2-வது எதிரியான நீங்கள் நேரடியாகவோ (அல்லது) வழக்கறிஞர் மூலமாகவே மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி தேதியில் தவறாமல் ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்படும் என்பதை இதன் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
E.A.அருணகிரி, BSC BL
மனுதாரரின் வழக்கறிஞர்
திருவள்ளூர்

# தேனி கண்மாயில் குளிக்க சென்றபோது சிறுவர்கள் உட்பட 3 பேர் பலியான சோகம்

தேனி, ஜூன்.10–

பெரியகுளம் அருகே கண்மாயில் மூழ்கி 2 சிறுவர்கள் உட்பட 3 பேர் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கைலாசப்பட்டியில் முத்தாலம்மன் கோவில் திருவிழா நடைபெற்று வருகிறது. திருவிழாவை முன்னிட்டு நிலக்கோட்டையை சேர்ந்த கட்டிட தொழிலாளி லட்சுமணன், மூலச்சத்திரம் பகுதியை சேர்ந்த பாபு, மதுரையை சேர்ந்த பன்னீர்செல்வம்(25) ஆகியோர் தனது குடும்பத்துடன் கைலாசப்பட்டியில் உள்ள உறவினர் தர்மராஜ் வீட்டுக்கு நேற்று வந்தனர். இந்நிலையில் நேற்று மாலை கைலாசப்பட்டி அருகே உள்ள பாப்பியன்பட்டி கண்மாயில் குளிப்பதற்காக பன்னீர்செல்வம், லட்சுமணன் மகன் மணிமாறன்(12), பாபு மகன் சபரிவாசன்(11) ஆகியோர் சென்றுள்ளனர்.

அப்போது கண்மாயில் குளித்து கொண்டிருந்த சிறுவர்கள் ஆழமான பகுதிக்கு சென்றதால் நீரில் தத்தளித்து உள்ளனர். இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த பன்னீர்செல்வம் தண்ணீரில் இறங்கி அவர்களை காப்பாற்ற முயன்றார். அவருக்கு நீச்சல் தெரியாததால் 3 பேரும் நீரில் மூழ்கினர். இதனை அறிந்த அப்பகுதியினர் விரைந்து வந்து கண்மாயில் குதித்து 3 பேரையும் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் இவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். தகவல் அறிந்த போலீசார் உயிரிழந்த 3 பேரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தேனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்து குறித்து தென்கரை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



▶ திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த மேல்செங்கம் ஊராட்சிக்குட்பட்ட தண்டம்பட்டு கிராமத்தில் தமிழ்நாடு அரசு வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் சார்பில் வேளாண் பெருமக்களான அனைத்து துறைகள் ஒன்றிணைந்த சிறப்பு முகாம் நடைபெற்றது.அதில் செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்து வனச்சரகத்தின் மகளிர் சுய உதவிக் குழுவினர்களுக்கு 1 நபருக்கு ரூபாய் 10 ஆயிரம் வீதம் காசோலை சுமார் 50 நபருக்கு வழங்கினார்.உடன் திருவண்ணாமலை தண்டராம்பட்டு வனச்சரகம் செங்கம் வனக்குழு தலைவர் டி.என்.ஆர்.செழியன், திமுக ஒன்றிய செயலாளர் பிரபாகரன், மாவட்ட கவுன்சிலர் ரா.சகுந்தலாராமஜெயம், மாவட்ட கவுன்சிலர் த.செந்தில்குமார், வனச்சரகம் செங்கம் அலுவலர் ச.ஆறுமுகம் (ரேஞ்சர்),வன அலுவலர்கள் ரா.பாலசந்தர்,ஆ.நிர்மலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரசு பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் தொடரும்

## அமைச்சர் அன்பில் மகேஷ் அறிவிப்பு

சென்னை, ஜூன்.10-

அரசுப் பள்ளிகளில் எல்கேஜி/யுகேஜி வகுப்புகள் தொடர்ந்து இயங்கும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

"தமிழ்நாட்டில் 2,381 அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்குள் அமைந்த அங்கன்வாடி மையங்கள் பரிசோதனை அடிப்படையில் எல்.கே.ஜி, யு.கே.ஜி வகுப்புகளாக மாற்றப்பட்டு சில ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

முந்தைய ஆட்சிக் காலத்தில் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையின் எண்ணிக்கை மிகவும் குறைந்திருந்த காரணத்தால், கூடுதல் எண்ணிக்கையில் இருந்த ஆசிரியர்கள் எல்.கே.ஜி, யு.கே.ஜி வகுப்புகளை எடுக்க அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், அரசுப் பள்ளிகளின் தரத்தினை உயர்த்திட இந்த அரசு கடந்த ஓராண்டாக எடுத்து வரும் பல்வேறு சிறப்பு முயற்சிகளின் காரணமாக சுமார் 7 இலட்சம் மாணவர்கள் கடந்த கல்வியாண்டில் மட்டும் மாநிலம் முழுவதுமுள்ள பல்வேறு அரசுப் பள்ளிகளில் பல்வேறு வகுப்புகளில் புதிதாக சேர்ந்துள்ளனர். இதன் காரணமாக, அரசுப் பள்ளிகளில் கூடுதலாக கடந்த கல்வியாண்டில் 3000 வகுப்புகள் தொடங்கப்பட்டன.

அதிகமான எண்ணிக்கையிலான மாணவர் சேர்க்கையினால், அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களின் தேவை அதிகரித்ததையடுத்து எல்.கே.ஜி, யு.கே.ஜி வகுப்புகளில் பாடம் எடுக்க அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஆசிரியர்கள் பணி மாறுதல் வாயிலாக 1 முதல் 5 வகுப்புகளுக்கு ஆசிரியர்களாக அண்மையில் சென்றுள்ளனர்.

இருப்பினும் சம்பந்தப்பட்ட அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள் தொடர்ந்து அவர்களது கல்வியினை தங்கு தடையின்றி பெற அனைத்து நடவடிக்கைகளுக்கும் அரசால் எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் எல்.கே.ஜி, யு.கே.ஜி வகுப்புகளை அரசுப்பள்ளிகளில் நொடர்ந்து நடத்திட வேண்டும் என பல்வேறு தரப்பினரிடமிருந்தும் வரப்பெற்ற கோரிக்கையினை ஏற்று, தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவுரைக்கிணங்க, அரசுப் பள்ளிகளில் எல்.கே.ஜி, யு.கே.ஜி வகுப்புகள் தொடர்ந்து நடைபெற பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. இதற்கென தகுதியான சிறப்பாசிரியர்கள் தேவையான இடங்களில் நியமிக்கப்படுவர்.

இவ்வாறு, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






மேலூரில் வீரமாமுனிவர் இலக்கிய பேரவை சார்பில் நடந்த விழாவில் திருக்குறள் ஒப்புவித்த மாணவன் கார்த்திக்- கு நல்லாசிரியர் ஜான்பெலிக்ஸ் கென்னடி பொன்னாடை போர்த்தி பாராட்டி பரிசு வழங்கினார். அருகில் ஆசிரியர்கள் சரவணன், ராஜி, ராமர், மாரிமுத்து ஆகியோர் உள்ளனர்.

புதுக்கோட்டையில் பணியிழந்த

# முன்னாள் மக்கள் நலப்பணியாளர்கள் வேலை உறுதித் திட்டப் பணி ஒருங்கிணைப்பாளர்களாக பணிபுரிய வாய்ப்பு – கலெக்டர்

புதுக்கோட்டை, ஜூன்.10-

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 08.11.2011 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில், பணியிழந்த முன்னாள் மக்கள் நலப்பணியாளர்களை அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், வேலை உறுதித் திட்டப் பணி ஒருங்கிணைப் பாளர்களாக" பணிபுரிய வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

எனவே 08.11.2011 அன்று பணியிழந்த முன்னாள் மக்கள் நலப் பணியாளர்கள் தற்போது இப்பணியில் ஈடுபட விருப்பமுள்ளவர்கள் தங்களது விருப்ப கடிதம் மற்றும் அதற்கான பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை சமர்ப்பித்து பணியில் சேருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இது தொடர்பாக தாங்கள் ஏற்கனவே பணியாற்றிய ஒன்றியங்களிலுள்ள வட்டார வளர்ச்சி அலுவலரை (கிராம ஊராட்சி) நேரடியாக தொடர்பு கொண்டு தாங்கள் ஏற்கனவே பணியாற்றிய விவரத்துடன் தற்போது வழங்கப்படவுள்ள பணியில் ஈடுபட விருப்பமுள்ளவர்கள் அதற்கான விண்ணப்பத்தையும், விருப்பக்கடிதத்தையும் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)-யிடம் 13.06.2022 முதல் 18.06.2022-க்குள் வழங்க வேண்டும்.

அவ்வாறு பணியில் சேர விருப்பமுள்ளவர்கள் மட்டுமே இப்பணியிடத்திற்கு பரிசீலிக்கப்படுவர் என்பதால், இவ்வறிவிப்பிற்கேற்ப தவறாமல் தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலரை (கிராம ஊராட்சி) தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறையில் உணவு பாதுகாப்பு நாளை முன்னிட்டு ஜோதி பவுண்டேசன் சார்பில் மூன்று வேளை உணவு

மயிலாடுதுறை, ஜூன்-10;



மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஜோதி பவுண்டேசன் சார்பில் சாலையோரம் உணவின்றி வாழும் நலிவுற்ற மக்களுக்கு காலை உணவு வழங்கி வருகின்றது அந்த வகையில் செவ்வாய்க்கிழமை உணவு பாதுகாப்பு நாளை முன்னிட்டு மூன்று வேலை மூலிகை உணவு வழங்கப்பட்டது.

மயிலாடுதுறை நகரம் சித்தர்காடு ரயில் நிலையம் அரசு பெரியார் மருத்துவமனை புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் கச்சேரி சாலை உள்ளிட்ட மயிலாடுதுறை சுற்றியுள்ள பகுதிகளில் சாலையோரம் பசியோடு இருக்கும் நலிவுற்ற மக்களுக்கு மயிலாடுதுறை ஜோதி பவுண்டேஷன் சார்பில் அதன் நிறுவனர் ஜோதி ராஜன் மூலிகை உணவுகளை காலை மற்றும் மதியம் இரவு மூன்று வேளை வழங்கினார். உண்ணும் உணவை வீணாக்காதீர்கள் மற்றும் இயற்கை உணவை சாப்பிடுவதற்கும் பொதுமக்களிடம் அறிவுரைகள் வழங்கினார் இயற்கை வளங்களை பேணிக் காக்கவும் தண்ணீர் சிக்கனத்தை பற்றியும் கருத்துரை கூறினார்கள்.

ஜோதி பவுண்டேஷன் செய்யும் இச்சேவையை பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், அரசியல் பிரமுகர்கள் பாராட்டுகளை தெரிவித்து ஊக்கப்படுத்தி வருகின்றனர். இதில் ஜோதி பவுண்டேஷன் பொறுப்பாளர்கள் செயலாளர் மணிகண்டன் பொருளாளர் செந்தில்நாதன் ஆர்பிசெந்தில் மற்றும் உறுப்பினர்கள் உடனிருந்தனர்

# ஒழுகைமங்கலம் சீதளா மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்– திரளான பக்தர்கள் தரிசனம்

தரங்கம்பாடி, ஜூன்- 09;



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா ஒழுகைமங்கலம் கிராமத்தில் ஸ்ரீ சீதளா மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சோழ நாட்டு சக்தி பீடங்களில் ஒன்றாக திகழும் இந்த திருக்கோவில் பரிவார தெய்வங்களாக காத்தவராயன், பிடாரி அம்மன் சன்னதிகளும் அமைந்துள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த கோவிலில் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் பொன்னூர் கண்ணன் சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த 5-ஆம் தேதி பூர்வாங்க பூஜைகள் தொடங்கப்பட்டு ஏழாம் தேதி மாலை முதல் கால யாகசாலை பூஜைகள் தொடங்கியது. காலை யாகசாலை, நான்காம் கால பூஜைகள் முடிவுற்று பூர்ணாகுதி மற்றும் மஹா தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து யாகசாலையில் இருந்து கடங்கள் புறப்பட்டு வேத மந்திரங்கள் ஓத மங்கள வாத்தியங்கள் இசைக்க கோயிலை வலம் வந்து அம்பாள் மற்றும் பரிவார தெய்வங்களின் விமான கலசங்களை அடைந்தன அதனையடுத்து பாலாஜி சிவாச்சாரியார் விமான கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர்.

தொடர்ந்து அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு கும்பாபிஷேகத்தை கண்டு அம்பாளை தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை கோவில் செயல் அலுவலர் முருகேசன் ஆய்வாளர் பத்ரி நாராயணன் மற்றும் கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர். கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் வசந்த ராஜ் சீர்காழி காவல் துணை கண்காணிப்பாளர் லாமேக் தலைமையில் பொறையார் காவல் ஆய்வாளர் சிங்காரவேலு, திருவெண்காடு காவல் ஆய்வாளர் ஜெயந்தி, பாலையூர் காவல் ஆய்வாளர் விசித்திரா மேரி, பெரம்பூர் காவல் ஆய்வாளர் சிவதாஸ், குத்தாலம் காவல் ஆய்வாளர் வள்ளி உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48 நாள் மண்டல அபிஷேகம் நடைபெறுகிறது.

# மகளின் சடலத்தை கொடுக்க ரூ.50 ஆயிரம் லஞ்சம் பிச்சையெடுத்து பணம் சேகரிக்கும் பெற்றோர்



பிஹார், ஜூன்.10-

தங்கள் மகனின் சடலத்தை கொடுப்பதற்கு மருத்துவமனை ஊழியர் ரூ.50 ஆயிரம் லஞ்சம் கேட்டதால் வேறு வழியின்றி அவரது வயதான பெற்றோர் பிச்சையெடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பிஹார் மாநிலம் சமஸ்திபூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் சஞ்சீவ் தாக்குர் (35). சற்று மனநலம் பாதிக்கப்பட்டவரான இவர், கடந்த இரண்டு வாரங்களாககாணவில்லை எனக் கூறப்பட்டது. இதனிடையே, கடந்த 6-ம் தேதி சஞ்சீவ் தாக்குரின் சடலம் முஸ்ரிகராரி பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. இதையடுத்து, அவரது பெற்றோரை அழைத்த போலீஸார், இறந்து போனது அவர்களின் மகன் சஞ்சீவ் தாக்குர் தான் என்பதை உறுதிப்படுத்தினர்.

பின்னர் அவரது உடல் சதார் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அங்கு பிரேதப் பரிசோதனை முடிவடைந்த நிலையில், மகனின் சடலத்தை வாங்குவதற்காக அவரது தந்தை மகேஷ் தாக்குர் மருத்துவமனைக்கு சென்றுள்ளார். ஆனால் அங்கிருந்த ஊழியர்கள், ரூ.50 ஆயிரம் கொடுத்தால் மட்டுமே சடலத்தை கொடுப்போம் எனத் தெரிவித்துள்ளனர்.

இதனால் என்ன செய்வது எனத் தெரியாமல் தவித்த கூலித் தொழிலாளியான மகேஷ் தாக்குர், ரூ.50 ஆயிரம் பணத்தைதிரட்டுவதற்காக அதே பகுதியில் தனது மனைவியுடன் கடந்த 3 நாட்களாக பிச்சை எடுத்து வருகிறார். இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் பூதாகரமானதை அடுத்து, சம்பந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகம் சஞ்சீவ் தாக்குரின் உடலை உடனடியாக அவரது பெற்றோரிடம் ஒப்படைத்தது. இதுகுறித்து உரிய விசாரணை நடத்தப்பட்டு லஞ்சம் கேட்ட ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பிஹார் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

# நபிகளை அவதூறாக பேசியவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்படும் – ஈரானிடம் அஜித் தோவல் உறுதி

ஈரான், ஜூன்.10-

நபிகள் குறித்து அவதூறாக பேசியவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்படும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உறுதியளித்ததாக ஈரான் கூறியுள்ளது.

பாஜகவின் தேசிய செய்தித் தொடர்பாளரான நுபுர் சர்மா கடந்த வாரம் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். அப்போது அவர் நபிகள் குறித்து ஆட்சேபணைக்குரிய கருத்துகளை தெரிவித்தார். அதேபோல, டெல்லி பாஜக நிர்வாகி நவீன் ஜிண்டாலும் நபிகள் குறித்து அவதூறான கருத்துகளை கூறியிருந்தார். இது இஸ்லாமியர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஒருகட்டத்தில், இந்தியாவையும் தாண்டி சர்வதேச அளவில் இந்த விவகாரம் பேசுபொருளாக மாறியது. இதனைத் தொடர்ந்து, நபிகள் நாயகம் குறித்து பாஜக நிர்வாகிகள் தரக்குறைவாக பேசியதற்காக ஈரான், கத்தார், சவுதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகள் இந்தியாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தன.

இதையடுத்து, நுபுர் சர்மாவை கட்சியில் இருந்து பாஜக இடைநீக்கம் செய்தது. நவீன் ஜிண்டால் கட்சியில் இருந்தே நீக்கப்பட்டார். மேலும், அவர்கள் மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்தியாவின் இந்த உடனடி நடவடிக்கைக்கு வளைகுடா நாடுகள் பாராட்டு தெரிவித்து வருகின்றன.

இந்த சூழலில், ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹுசேன் அமீர் அப்துல்லாயன் அரசுமுறைப் பயணமாக நேற்று இந்தியா வந்துள்ளார். இதன் ஒருபகுதியாக, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரை அவர் சந்தித்து பேசினார். அப்போது இருதரப்பு உறவுகள், வர்த்தகம், பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடைபெற்றது.

இதில் அஜித் தோவலிடம் நபிகள் குறித்து அவதூறு கருத்துகள் தெரிவிக்கப்பட்ட விவகாரத்தை ஹுசேன் அமீர் எழுப்பியதாக தெரிகிறது. அப்போது, நபிகள் நாயகம் குறித்து அவதூறாக பேசியவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்படும் என அஜித் தோவல் உறுதியளித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஈரான் அரசு இந்த தகவலை தெரிவித்துள்ளது.

71 வயது தாத்தாவின் பாசப் போராட்டம் வெற்றி

# பேரக்குழந்தையை வளர்க்கும் பொறுப்பு ஒப்படைப்பு– சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு

குஜராத், ஜூன்.10-



முன்னதாக அந்த குழந்தையை வளர்க்கும் பொறுப்பு அதன் அத்தையிடம் இருந்தது. குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் வாழ்ந்து வரும் 5 வயது சிறுவன், கடந்த ஆண்டு மே-ஜூன் மாதங்களில் பல்லாயிரக் கணக்கானோரை காவு வாங்கிய கொரோனா தொற்றுநோயின் 2வது அலையில், தனது பெற்றோரை இழந்துவிட்டான்.

அதன்பின்னர், அந்த சிறுவனை கவனித்துக்கொள்ளும் பொறுப்பு, அவனுடைய தாய்வழி அத்தைக்கு குஜராத் ஐகோர்ட்டால் வழங்கப்பட்டது. 46 வயதான சிறுவனின் அத்தைக்கு மத்திய அரசு வேலை இருந்தது, மேலும் அவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. ஆனால், குழந்தையின் தாத்தாவும் பாட்டியும் பென்ஷன் பணத்தில் தான் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

இதனை காரணம் காட்டி, குஜராத் ஐகோர்ட்டு கொரோனாவால் பெற்றோரை இழந்த அந்த 5 வயது குழந்தையை வளர்க்கும் பொறுப்பை அத்தையிடம் ஒப்படைத்தது.

இந்நிலையில், இதனை எதிர்த்து, சிறுவனின் தாத்தாவான 71 வயதான சுவாமிநாதன் குஞ்சு ஆச்சார்யா மற்றும் அவருடைய 63 வயது மனைவியுடன் சேர்ந்து சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசரித்த நீதிபதிகள் எம்.ஆர்.ஷா மற்றும் அனிருத்தா போஸ் ஆகியோர் அடங்கிய அமர்வு கூறியதாவது, நமது சமுதாயத்தில், ஒரு குழந்தையின் தந்தைவழி தாத்தா-பாட்டி, எப்போதுமே தங்கள் பேரக்குழந்தைகளை சிறந்த முறையில் கவனித்துக் கொள்கிறார்கள்.

தாத்தா பாட்டி பேரக்குழந்தையுடன் அதிகம் இணைந்திருப்பதால், குழந்தையின் தாய்வழி அத்தையுடன் ஒப்பிடும்போது பேரக்குழந்தைகளின் காவலுக்கு அவர்கள் மிகவும் தகுதியானவர்கள். அதேசமயம், தாய்வழி அத்தை தனது வசதிக்கேற்ப குழந்தையைச் சந்திக்கும் உரிமை உள்ளது. குழந்தையின் தாத்தா பாட்டியின் வருமானத்தை ஒரு அளவுகோலாக வைத்துக்கொண்டு, குழந்தையை வளர்க்கும் பொறுப்பை அவர்களுக்கு வழங்காமல் மறுக்க முடியாது. மேலும் இரு தரப்பும் மனக்கசப்பை விட்டுவிட்டு குழந்தையின் எதிர்காலத்தில் கவனம் செலுத்தவும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

# புதுக்கோட்டையில் 12வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து தற்கொலைக்கு காரணமாக இருந்த தாயின் கள்ளக் காதலன்

## உடந்தையாக இருந்த தாய் இருவருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை

புதுக்கோட்டை, ஜூன்.10-





புதுக்கோட்டை நகர பகுதிக்கு உட்பட்ட கணேஷ்நகர் பகுதியை சேர்ந்தவர் சூரியகலா(34). இவருக்கு 12 வயதுடைய மகள் இருந்த நிலையில் அவரது கணவரை பிரிந்து வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில் சூரியகலாவிற்கும் புதுக்கோட்டை சேங்கன்தோப்பைச் சேர்ந்த கணேசன்(32) என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டு நாளடைவில் அது தகாத உறவாக மாறியுள்ளது.

இந்நிலையில் கடந்த 2020ம் ஆண்டு கணேசன் சூரியகலா வீட்டில் இருந்தபோது அவரது 12 வயது மகளுக்கு மாதுளைப் பழச்சாற்றில் மயக்க மருந்து கலந்து கொடுத்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதன் பின்னர் சூரியகலாவின் 12 வயது மகள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதற்கு சூரிய கலாவும் உடந்தையாக இருந்துள்ளார். இதனையடுத்து சூரியகலாவின் தந்தை சின்னையா கொடுத்த புகாரின் அடிப்படையில் புதுக்கோட்டை கணேஷ் நகர் போலீசார் இருவரையும் கைது செய்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கானது புதுக்கோட்டை மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் வழக்கை விசாரணை செய்த நீதிபதி சத்யா சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து தற்கொலைக்கு காரணமாக இருந்த்து உறுதி செய்யப்பட்டதால் சிறுமியின் தாய் சூரியகலாவிற்கும் அவரது கள்ளக்காதலன் கணேசனுக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனையும், கூடுதலாக கணேசனுக்கு 20 ஆண்டு சிறை தண்டனையும் மூன்று லட்சம் ரூபாய் அபராதமும் சூரியகலாவிற்கு 10 ஆண்டு சிறைதண்டனையும் 2லட்சம் அபராதமும் விதித்தும் இந்த தண்டனைகள் அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

மேலும் நீதிபதி சத்யா தாய் என்ற உறவு புனிதமானது தாய் குழந்தைகளுக்கு அன்பும் அரவணைப்பும் கொடுத்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் ஆனால் அந்த உறவையே கொச்சைப்படுத்தி பெற்ற மகளுக்கே தனது சுகத்திற்காக இதுபோன்ற நிலையை இந்த வழக்கில் தண்டனை பெற்ற தாய் ஏற்படுத்தி விட்டதாக தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். இவ்வழக்கினை அரசு தரப்பு வழக்கறிஞர் யோகமலர் சிறப்பாக நடத்தியுள்ளார்.


மேலும் இவ்வழக்கினை சிறப்பாக புலன்விசாரணை செய்த காவல் ஆய்வாளர் அழகம்மாள் மற்றும் நீதிமன்ற பணிக்கான தலைமைக்காவலர் அனுராதா ஆகிய இருவரையும் புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா பார்த்திபன் வெகுவாக பாராட்டினார். தீர்ப்புக்குப் பின் குற்றவாளிகள் கணேசன் என்பவரை திருச்சி மத்திய சிறையிலும், சூரியகலா என்பவரை திருச்சி மகளிர் கிளைச் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com


ஸ்ரீ புவனேஸ்வரி
தங்கமாளிகை இல்ல
திருமண விழா
மணமக்கள் :
Er.N. விஜய்ஸ்ரீநாத் B.E., - M. சுப்ரஜா (எ) மீனா B.B.A.,
மணநாள் : 10-06-2022 வெள்ளிக்கிழமை
மணஇடம் : ADR திருமண மஹால்.
மாலையீடு, புதுக்கோட்டை.
திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
அனைவரையும் வருக! வருக!! என
அன்புடன் வரவேற்கிறேன்....
P.தெட்சிணாமூர்த்தி
தலைவர் செஞ்சுரி லயன்ஸ் சங்கம், புதுக்கோட்டை
மதன் ஜெகன் டிராவல்ஸ் & ஆம்புலன்ஸ் சர்வீஸ்,
புதுக்கோட்டை.


NMBC எங்கள் சங்கத்தின்
தலைவர் இல்ல...
திருமண விழா
10 JUN 2022
இடம் : ADR திருமண மஹால்
மாலையீடு, புதுக்கோட்டை.
மணமக்கள் :
Er.N.விஜய்ஸ்ரீநாத் B.E.,
M.சுப்ரஜா (எ) மீனா BBA.,
NEW MODI BADMINTON CLUB
PUDUKKOTTAI
மணமக்கள் தமிழ் காவியமாய் வாழ்க பல்லாண்டு...
NEW MODI BADMINTON CLUB
PUDUKKOTTAI
NMBC
நியூ மோடி பேட்மிண்டன் கிளப்
புதுக்கோட்டை
NEW MODI BADMINTON CLUB
PUDUKKOTTAI


எங்களின் இனிய நண்பர்
S.நடராஜன்
ஸ்ரீ புவனேஸ்வரி
தங்கமாளிகை இல்ல
10 JUN 2022
இடம் : ADR திருமண மஹால்
மாலையீடு, புதுக்கோட்டை.
மணமக்கள் :
Er.N.விஜய்ஸ்ரீநாத் B.E.,
M.சுப்ரஜா (எ) மீனா BBA.,
திருமண விழா
மணமக்களை வாழ்த்த வருகைதரும் அனைவரையும்
வருக! வருக!! என வரவேற்று மகிழ்கிறோம்...


Rtn.Major Donor.
PS.கருப்பையா
PSK.கல்வி நிறுவனங்கள்
கீழ 4-ம் வீதி, புதுக்கோட்டை
பேக்கரி
மஹராஜ்
புதுக்கோட்டை.
No.9,மார்த்தாண்டபுரம் முதல் தெரு,
புதுக்கோட்டை - 622 001.
Customer Service : 9655662206
Google Play
www.bakerymaharaj.com
fssai 12420016000073


CHENDHURAN
செந்துூரான்
பொறியியல் & பாலிடெக்னிக் கல்லூரி
லெணா விளக்கு, புதுக்கோட்டை.
TSH
டீம் ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல்
24 மணிநேர சிறப்பு மருத்துவமனை
எண் : 10, சத்தியமூர்த்தி ரோடு, புதிய பேருந்துநிலையம் எதிரில்,
புதுக்கோட்டை - 622 001.


எங்களின் இனிய நண்பர்
S.நடராஜன்
ஸ்ரீ புவனேஸ்வரி
தங்கமாளிகை இல்ல
10 JUN 2022
இடம் : ADR திருமண மஹால்
மாலையீடு, புதுக்கோட்டை.
மணமக்கள் :
Er.N.விஜய்ஸ்ரீநாத் B.E.,
M.சுப்ரஜா (எ) மீனா BBA.,
திருமண விழா
தங்கமென மிளிரும் குணம்
வைரமென மின்னும் மனம்
புதுகையே கொண்டாடும்
ஸ்ரீ புவனேஸ்வரி தங்க மாளிகை
நகையதிபர் நடராஜன்
இல்லத் திருமணவிழா.
அருந்தமிழ்ப் புகழ்போல
அன்பு மணமக்கள்
பல்லாண்டு வாழ்க !
ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை



**ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன்**
புதுக்கோட்டை

ஸ்ரீ புவனேஸ்வரி
தங்கமாளிகை

தரத்தில், விலையில்
மக்கள் மனதில் என்றும் முதலிடம்
உலக சாதனை படைத்த நிறுவனம்
கீழராஜ வீதி, புதுக்கோட்டை 1.

Owned & Published by S.SIVASAKTHIVEL, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By : K.SELVARAJ Printed at : Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor : S.SIVASAKTHIVEL. Phone : 04322-261577.
Chennai Office : Chief Reporter S.KADAR HUSSAIN, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# புதுக்கோட்டையில் கொடூரம் தாய், கள்ளக்காதலனுக்கு ஆயுள்

# ஜனாதிபதி தேர்தல் ஜூலை 18ல் நடைபெறுகிறது





# மகனின் உடலை பெற 50 ஆயிரம் லஞ்சம் பிச்சை எடுக்கும் பெற்றோர்


சென்னை / புதுக்கோட்டை | 10.06.2022 | varalaruu.com | பக்கம்:8 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

10.06.2022 வெள்ளி

# புதுகை வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் , தென்னிந்திய மிருதங்க இசைக் கலைஞர் (பி.1912) (இ.1981)



வே. தில்லைநாயகம் , தமிழக நூலகத்துறையின் முன்னோடி (பி.1925) (இ.2013)



நந்தமூரி பாலகிருஷ்ணா , இந்திய நடிகர், அரசியல்வாதி (பி.1960)



சுந்தர் பிச்சை , இந்திய-அமெரிக்க கணினி தொழில்நுட்ப மேலாளர் (பி.1972)



## இன்றைய நினைவு நாள்

அந்தோனி கோடி , குவெல் பூங்காவை வடிவமைத்த எசுப்பானியக் கட்டிடக் கலைஞர் (பி.1852) (இ.1926)



கே. முத்தையா , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், பொதுவுடைமைவாதி, இதழாளர், எழுத்தாளர் (பி.1918) (இ.2003)



கிரிஷ் கர்னாட் , கன்னட நடிகர், எழுத்தாளர் (பி.1938) (இ.2019)

